Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 156**/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW-7** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | **டாக்டர் நவீன் குமார்** |
| Father/Husband Name | : | ராஜா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | மருத்துவர் |
| Religion | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2025.

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை:–

நான் தற்போது மதுரை வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவர் தினேஷ் முருகன் என்பவருக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. தற்போது தினேஷ் முருகன் எங்கள் மருத்துவமனையில் பணிபுரியவில்லை, எனவே எங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற ராஜாத்தி சிகிச்சை பெற்ற

சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க எங்கள் மருத்துவ கல்லூரி டீன் வழங்கிய கடிதம் தாக்கல் செய்கிறேன். அது **அ.சா.ஆ.9**. எங்கள் மருத்துவமனையில் உள்ள சிகிச்சை ஆவணங்களின் படி கடந்த 25.04.2021ம் தேதி பகல் 12.30 மணியளவில் சுமார் 53 வயது மதிக்கத்தக்க ராஜாத்தி என்ற பெண் தலைக்காயத்திற்காக ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு கொண்டு வரப்பட்டுள்ளார். அவரை பரிசோதித்த மருத்துவர் தினேஷ் முருகன் வலதுபக்க தலையில் ஒரு வீக்க காயம், வலதுபக்க காதில் ஒரு கிழிந்த காயமும் இருந்ததாக பதிவு செய்துள்ளார். அவர் சிகிச்சைக்கு சேர்ந்த போது தன்னை அடையாளம் தெரியாத நபர் அடையாளம் தெரியாத பொருளால் தாக்கியதாக கூறியுள்ளார். அவர் தன்னை 24.04.2021 பகல் 01.30 மணியளவில் தன் வீட்டில் வைத்து தாக்கப்பட்டதாக கூறியுள்ளார். அவரை பரிசோதித்த மருத்துவர் தினேஷ் முருகன் முதல் உதவி சிகிச்சை வழங்கி உள்நோயாளியாக அனுமதித்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை கொடுங்காயங்கள் 30.04.2021ம் தேதி சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். வலதுபக்க தலையில் ஏற்பட்ட காயத்திற்கு X–ray and CT Scan எடுக்கப்பட்டதில் அவருக்கு தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக உள்ளது. மேற்படி ராஜாத்தி சிகிச்சைக்கு சேரும்போது தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேட்டின் நகல் **அ.சா.ஆ.10**. (எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) ராஜாத்திக்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.11**. ராஜாத்திக்கு ஏற்பட்ட காயங்கள் சுத்தியலால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

ஒரு நபர் சட்டம் சார்ந்த வழக்கில் காயமுற்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் அங்கு விபத்து பதிவேடு தயார் செய்வார்கள் என்றால் சரிதான். ஒரு நபர் வேறு மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்று எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்திருந்தால் ஏற்கனவே சிகிச்சை பெற்ற விவரங்களை எங்கள் மருத்துவ ஆவணங்களில் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையில் தயாரிக்கப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கையில் (அ.சா.ஆ.10) வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதற்காக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். அ.சா.2 ராஜாத்தி தனக்கு வீட்டில் வைத்து காயம் ஏற்பட்டதாக கூறியதன் அடிப்படையில் அ.சா.ஆ.10 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.11

காயச்சான்றிதழில் காயத்தில் அளவையோ, காயத்தின் நிறத்தையோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சுத்தியலால் தலையில் தாக்கப்படும்போது மண்டையோட்டில் சுத்தியல் பதிவாகும் என்றால் சரிதான். அ.சா.ஆ.10 விபத்து பதிவேட்டு அறிக்கையில் சுத்தியலின் பதிவு இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 ராஜாத்தி கடின பொருட்களில் வேகமாக விழும்போதோ அல்லது தவறி மோதிக்கொள்வதாலோ அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல. வாய்ப்பு உண்டு என்றும் ஆனால் நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காயத்தின் தன்மையை மதிப்பூட்டி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிகிச்சை வழங்கிய மருத்துவர் தினேஷ் முருகன் எங்கிருக்கிறார் என்று தெரியும் என்றும் வழக்கிற்காக எங்கிருக்கிறார் என்பது தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.